தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சேவூரில் ரூ. 24 லட்சத்திற்கு நிலக்கடலை ஏலம்

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் வரத்து அதிகரித்து ரூ. 24 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது . இந்த வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு, 1,500 நிலக்கடலை மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 4,810 முதல் ரூ. 5,110 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 4,320 முதல் ரூ. 4,650 வரையிலும், மூன்றாவது ரகம் ரூ. 3,000 முதல் ரூ. 3,900 வரையிலும், பச்சை ரக நிலக்கடலை ரூ. 2,600 முதல் ரூ. 2,900 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 24 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 15 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசுவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 189 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

### எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.13.36 லட்சத்திற்கு கொப்பரை ஏலம்

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை ரூ.13.36 லட்சத்திற்கு கொப்பரை ஏலம் நடைபெற்றது. எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 344 மூட்டைகளில் 9 ஆயிரத்து 441 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில் முதல் தர கொப்பரை அதிகபட்ச விலையாக கிலோவுக்கு ரூ.110.10 -க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ. 105.15 -க்கும், இரண்டாம் தர கொப்பரை அதிகபட்ச விலையாக ரூ.

106.15 -க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ. 75.65 -க்கும் என மொத்தம் ரூ. 9 லட்சத்து 89 ஆயிரத்து 997க்கு ஏலம் நடைபெற்றது. இதேபோல் 12 ஆயிரத்து 265 கிலோ எடையுள்ள 32 ஆயிரத்து 560 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டன. இதில் அதிகபட்ச விலையாக டன்னுக்கு ரூ. 30 ஆயிரத்து 369 க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ.25 ஆயிரத்து 799 க்கும் ஏலம் போனது. இதில் மொத்தம் ரூ. 3 லட்சத்து 46 ஆயிரத்து 275 க்கு ஏலம் நடைபெற்றது.

**இயந்திர நடவு: வேளாண் உதவி இயக்குநர் அறிவுரை**

மேல்மலையனூர் பகுதியில் உள்ள விவசாயிகள் இயந்திரம் மூலம் நெல் நடவுப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சாதாரண முறையில் நெல் நடவு செய்வதை விட இயந்திரம் மூலம் நடவு செய்யலாம். இதற்கு குறைந்த அளவு விதையே போதுமானது. 15 நாள் வயதுடைய நாற்றுகளை நடவுக்குப் பயன்படுத்தலாம். நடவுக்கு முன் ஒரு ஏக்கருக்கு நெல் நுண்ணுரம் 5 கிலோவை தேவையான மணலுடன் கலந்து வயலில் இட வேண்டும். பயிருக்குத் தேவையான நுண்ணூட்டச்சத்து குறைவின்றி கிடைப்பதால் பயிர் செழித்து வளரும். உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபேக்டீரியா ஆகியவற்றை தேவையான மக்கிய தொழு உரத்துடன் கலந்து வயலில் தூவி பின்னர் இயந்திரம் மூலம் நடவு மேற்கொள்ளலாம். உயிர் உரங்களை 50 சதவீதம் மானியத்தில் வாங்கி பலனடையலாம். நடவு இயந்திரம் மூலம் நடவு மேற்கொள்வதற்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் மானியம் வழங்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலரை அணுகலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பெரியாறு நீரை மதுரைக்கு கொண்டு வரும் பணி தொடங்கியது! தமிழக-கேரள எல்லையில் மாநகராட்சி அதிகாரிகள்




மதுரை : மதுரை மாநகராட்சியின் குடிநீர் தேவைக்கு பெரியாற்று நீரை கொண்டு வரும் திட்டத்திற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளதால், தமிழக-கேரள எல்லையில் உள்ள 'போர்பே' அணையில் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். மாநகராட்சியின் குடிநீர் தேவை வைகை அணையிலிருந்து கிடைக்கும் நீரை நம்பியே உள்ளது. அங்கு பெறப்படும் நீர் முதலாம் வைகை, இரண்டாம் வைகை குடிநீர் திட்டங்கள் பண்ணைபட்டியில் சுத்திகரிக்கப்பட்டு மதுரைக்கு கொண்டு வரப்படுகிறது.2012ம் ஆண்டிற்கு முன் 72 வார்டுகளாக இருந்த மதுரையின் மக்கள் தொகையை கருத்தில் கொண்டே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆனாலும் வினியோகத்தில் நடக்கும் குளறுபடியால் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படாமல் இருந்தது. இந்நிலையில் 2012 உள்ளாட்சி தேர்தலுக்கு பின் 100 வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டதால் மதுரையின் குடிநீர் தேவை பல மடங்காக அதிகரித்தது. அடுத்தடுத்து பருவமழை பாதிப்பு, நிலத்தடி நீர்மட்டம் குறைவு போன்ற காரணங்களால் குடிநீர் வினியோகம் கடும் நெருக்கடியை சந்தித்தது.இந்நிலையில் மாற்று குடிநீர் திட்டம் கொண்டு

வர முடிவு செய்யப்பட்டது. தேனி மாவட்டம் லோயர் கேம்ப் பகுதியில் மின் உற்பத்திக்கு பெரியாற்றில் பெறப்படும் நீர், அதன் பின் பல்வேறு குடிநீர் திட்டங்கள், விவசாயத்திற்கு பயன்படுத்தப் படுகிறது. ஆண்டு தோறும் நீர் கிடைக்கும் அந்த ஆதாரத்தை பயன்படுத்தி மதுரையின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடிவு செய்யப்பட்டு, கடந்த மாதம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ரூ.640 கோடியில் திட்டமதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது. திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் கிடைத்த நிலையில் அதற்கான நிதியை மத்திய அரசின் நகர்புற வளர்ச்சி திட்டத்தில் பெற மாநகராட்சி நிர்வாகம் முடிவு செய்துள்ளது. திட்டம் குறித்த முழுமையான அறிக்கையை தயார் செய்யவும், கண்காணிக்கவும் குடிநீர் வடிகால் வாரியத்தின் ஓய்வு பெற்ற செயற்பொறியாளர் மொக்கை நியமிக்கப்பட்டுள்ளார். அக்குழுவினர் தமிழக-கேரள எல்லையில் அமைந்துள்ள பெரியாறு 'போர்பே' அணையில் ஆய்வு மேற்கொண்டனர். பெரியாற்றிலிருந்து வரும் நீர், இந்த அணைக்குதான் முதலில் வந்து சேரும். அதன் பிறகு பாதாள கால்வாய் வழியாக கொண்டு வரப்பட்டு ராட்சத குழாய்கள் மூலம் லோயர் கேம்ப் மின் உற்பத்தி மையத்திற்கு வந்தடையும்.எனவே 'போர்பே' அணையில் நடத்தப்படும் ஆய்வு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. அணையின் நீர் கொள்ளளவு, நீர் இருப்பு, நீர் வெளியேற்றம் உள்ளிட்டவற்றை ஆய்வு மேற்கொண்ட குழுவினர் அதன் பின் லோயர் கேம்ப் வந்து நீரை கொண்டு செல்வதற்கான வழித்தடம் குறித்தும் ஆய்வு நடத்தினர். ஆய்வுகள் அனைத்தும் வீடியோ பதிவு செய்யப்பட்டது. இதன் மூலம் குடிநீர் திட்டம் வருவது உறுதியாகியுள்ளது. இக்குழுவில் மாநகராட்சி நகர் பொறியாளர் மதுரம் உள்ளிட்ட பொறியாளர்கள் இடம்பெற்றுள்ளனர். மேயர் ராஜன் செல்லப்பாவிடம் கேட்ட போது, "புதிய குடிநீர் திட்டம் கொண்டு வருவதில் நிர்வாகம் ஆர்வம் காட்டுகிறது. அதற்கான வேலைகளும் மும்முரமாக நடந்து வருகிறது. பெரியாறு குடிநீர் திட்டம் குறித்து அரசு

தரப்பில் விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும்," என்றார். **இரு வழித்தடங்கள் தேர்வு** : 'லோயர் கேம்ப்' மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேறும் நீரை, குழாய் மூலம் பண்ணைப்பட்டி கொண்டு வந்து வைகை குடிநீர் திட்டங்கள் வழியாக மதுரைக்கு வினியோகம் செய்ய ஏற்கனவே முடிவு செய்திருந்தனர். லோயர் கேம்ப்- பண்ணைபட்டிக்கு கூடலுார், கம்பம் மெயின் ரோடு வழியாகவோ அல்லது பதினெட்டாம் கால்வாய் திட்டம் வழியாக வந்து மந்தைவாய்க்கால் வழியாக கம்பம் ரோட்டை அடையும் வழியையோ தேர்வு செய்ய அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். ஓரிரு நாளில் நீர் வந்தடையும் வழி இறுதி செய்யப்பட உள்ளது. அடுத்த 6 மாதத்திற்குள் பணி முழுவீச்சில் தொடங்க வாய்ப்பிருப்பதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## <u>உத்திரமேரூரில் 37 மி.மீ., மழை</u>

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்தது. இதில், அதிகபட்சமாக உத்திரமேரூரில், 37 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. தென்மேற்கு பருவமழை கடந்த சில தினங்களாகவே, தமிழகத்தில் பரவலாக பெய்து வருகிறது. அந்த வகையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில், மாலை மற்றும் இரவு நேரங்களில் மட்டும் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு, காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்துள்ளது. இதில், உத்திரமேரூர் பகுதியில் அதிகபட்சமாகஇ 37 மி.மீட்டரும், குறைந்தபட்சமாக, செங்கல்பட்டில், 1 மி.மீட்டரும் மழை பதிவானது. **காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் பெய்த மழையில் அளவு (மி.மீ.,):**

இடம்மழையில்அளவு(மி.மீ.,)

உத்திரமேரூர்37

செங்கல்பட்டு1

காஞ்சிபுரம்16

ஸ்ரீபெரும்புதுார்12

தாம்பரம்4

மதுராந்தகம்9

செய்யூர்16

திருக்கழுக்குன்றம்13.2

மாமல்லபுரம்12.8

கேளம்பாக்கம் 5

<u>**நேரடி விதைப்பாட்டில் விவசாய பணிகள் விறுவிறு**</u>

பொன்னேரி : மழையை நம்பி பயிரிடும் விளை நிலங்களில், நேரடி விதைப்பாடு மூலம் விவசாயிகள், விவசாய பணிகளை மேற்கொண்டு உள்ளனர். மீஞ்சூர் ஒன்றியம், சேலியம்பேடு, ராமய்யாபாளையம், கங்காணிமேடு, மாங்கோடு, கள்ளூர் உள்ளிட்ட கிராமங்களில், நிலத்தடி நீர் உவர்ப்பாக இருக்கிறது. இங்கு, ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் மழைநீரை நம்பி, நேரடி விதைப்பாடு மூலம், 1,200 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் செய்யப்படுகிறது.சில தினங்களாக பெய்து வரும் மழையால், தற்போது, மேற்கண்ட பகுதிகளில் ஈரப்பதம் இருக்கிறது. இதனால் விவசாயிகள், விளைநிலங்களில் உழவுப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.ஒரு சில இடங்களில், நெல் விதைக்கப்பட்டு, பயிர்கள் முளைத்துள்ளன. நேரடி விதைப்பாடு முறைக்கு, ஒரு ஏக்கருக்கு, 60 கிலோ விதை நெல் தேவைப்படுகிறது. இதன் அறுவடை காலம், நான்கு மாதங்களாகும். மழை நீரை நம்பி விதைத்துள்ளதால், விவசாயிகள் மழைக்காக காத்திருக்கின்றனர்.

<u>**சவுக்கு வளர்ப்பதில் ஆர்வம்; விவசாயத்தை காட்டிலும் அதிக வருமானம்**</u>

கும்மிடிப்பூண்டி : எந்த சிக்கலும் இன்றி, விவசாயத்தை விட வருமானம் அதிகம் தரக்கூடியது என்பதால், சவுக்கு மரங்கள் வளர்ப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். அதிக அளவில் நிலம்

வைத்திருக்கும் நில உரிமையாளர்கள், விவசாயம் செய்வதில் பல நடைமுறை சிக்கல்களை சந்தித்து வருகின்றனர். உதாரணத்திற்கு, வேலை ஆட்கள் கிடைப்பதில்லை, மின்சார பற்றாக்குறையால் தேவை நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச முடிவதில்லை,பராமரிப்பில் உள்ள சிக்கல் போன்ற காரணங்களால், விளைச்சல் பாதித்து பல சமயங்களில் போதிய வருவாய் கிடைக்க பெறாமல் உள்ளனர். இந்த சிக்கல்களை தவிர்க்கும் நோக்கில், தற்போது, சவுக்கு மரம் வளர்ப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். ஒரு ஏக்கருக்கு 2,000 முதல் 2,500 சவுக்கு கன்றுகள் நடுகின்றனர். கன்றுகள் நன்கு வளர, முதல் மூன்று மாதங்களுக்கு மட்டும் முறையாக தண்ணீர் பாய்ச்சுகின்றனர். அதன்பின், எந்த பராமரிப்பு செலவும் கிடையாது. ஐந்து ஆண்டுகளில், ஒரு ஏக்கருக்கு,, ஐந்து லட்சம் ரூபாய் வரை, வருவாய் பெறுகின்றனர்.மொத்தத்தில், ஒரு ஏக்கருக்கு, 10 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே செலவழித்து பெரும் லாபத்தை சம்பாதிப்பதால், நில உரிமையாளர்கள் சவுக்கு வளர்ப்பிற்கு மாறி வருகின்றனர்.

## <u>விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடு</u>

விழுப்புரம்: தமிழக விவாய தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடு, விழுப்புரத்தில் நடந்தது. விழுப்புரம் எம்.கே. மகாலில் நடந்த மாநாட்டிற்கு மாவட்ட அமைப்பு குழு பொறுப்பாளர் குப்புசாமி தலைமை தாங்கினார். மாவட்ட குழு உறுப்பினர் ஜெயராமன் வரவேற்றார். அகில இந்திய துணை செயலாளர் ராமமூர்த்தி, இந்திய கம்யூ., மாவட்ட செயலாளர் சரவணன் சிறப்புரையாற்றினர். முதியோர் உதவித் தொகையை தடையின்றி வழங்க வேண்டும். தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் 200 நாட்கள் வேலை வழங்கி, நாள் கூலி 300 ரூபாயாக உயர்த்திட வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் அனைவ ருக்கும் ரேஷன் கார்டு வழங்க வேண்டும். வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு

நிவாரண உதவி வழங்க வேண்டும். ஏழைகளுக்கு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விவசாய சங்க மாவட்ட செயலாளர் கலியமூர்த்தி, ஏ.ஐ.டி.யூ.சி., சவுரிராஜன், இந்திய கம்யூ., மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் அப்பாவு, மாவட்ட அமைப்புக்குழு உறுப்பினர்கள் ஆறுமுகம், சீத்தாம்பு, முருகன், ராமன், ஏழுமலை, சங்கர், ஜீவா ஜெயராமன், குப்பன், ஜெயசீலி கலந்து கொண்டனர். மாவட்ட அமைப்புக்குழு உறுப்பினர் வேல்முருகன் நன்றி கூறினார்.

## <u>செனப்பை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்</u>

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதியில் இயற்கை உரமான செனப்பை விதைத்து உழுது பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கள்ளக்குறிச்சி பகுதியில் கரும்பு, மஞ்சள், மக்காசோளம், மரவள்ளி, பருத்தி பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இப்பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளதால் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. வெங்காயம், கத்திரி, வெண்டை, முருங்கை பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கிணற்று பாசனம் மட்டுமின்றி மானாவாரி நிலங்களில் பெய்யும் மழை நீரை நம்பியும் இப்பகுதியில் விவசாயம் செய்யப் படுகிறது. விளை நிலங்களில் ஏர் உழுது பயிரிடப்பட்ட நிலையில் இயற்கை உரமாக விளங்கும் செனப்பை விதைத்து உழுது பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். செயற்கை உரங்களை பயன்படுத்தி பயிர் செய்வதை காட்டிலும் இயற்கை உரத்தினால் மகசூலும் அதிகளவில் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## <u>மேட்டூர் அணை நீர்மட்டம் சரிவு: 16 கண் பாலம் விரைவில் திறப்பு</u>

மேட்டூர் : மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 99 அடியாக சரிந்தது. இதனால், அணை உபரி நீர்திறக்கும், 16 கண் மதகு பாலம், சில

நாட்களில் போக்குவரத்துக்கு திறக்கப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில், பருவமழை தீவிரம் குறைந்ததால், நேற்று மேட்டூர் அணைக்கு வினாடிக்கு, 7,694 கனஅடி நீர் மட்டுமே வந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 23,000 கனஅடி நீர் (நாள் ஒன்றுக்கு, 2 டி.எம்.சி.,) வெளியேற்றப்படுகிறது. அதேநேரம் வினாடிக்கு, 7,694 கனஅடி நீர் வருவதால், அணை நீர்இருப்பு நாள் ஒன்றுக்கு, 1.5 டி.எம்.சி., வீதம் சரிகிறது. கடந்த, 8ம் தேதி, 103.700 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று, 99.220 அடியாக சரிந்தது. கடந்த, 7 நாளில் நீர்மட்டம், 5 அடியும், நீர் இருப்பு, 6 டி.எம்.சி.,யும் சரிந்துள்ளது. பள்ளி வாகனங்கள், டவுன்பஸ்கள், டூவீலர் செல்வதற்காக மேட்டூர் அணை உபரி நீர்திறக்கும், 16 கண் மதகு பாலம் காலை, 7 முதல், 10 மணி வரையிலும், மாலை, 4 மணி முதல் இரவு, 7 மணி வரையிலும் திறக்கப்படும். கடந்த கடந்த ஆக.,10ம் தேதி, மேட்டூர் அணை நீர்மட்டம், 108 அடியாக அதிகரித்ததால், 16 கண் மதகு பாலத்தில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது. தற்போது அணை நீர்மட்டம், 99 அடியாக குறைந்து விட்ட நிலையில், தற்போது, 16 கண் மதகு பாலத்தில் ரோடு பராமரிப்பு பணி நடக்கிறது. பணி முடிந்து சில நாட்களில், வழக்கம் போல போக்குவரத்துக்கு பாலம் திறக்கப்படவுள்ளது.

## முட்டை விலை 330 காசாக உயர்வு

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 320 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசு அதிகரித்து, 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை

(காசுகளில்) நிலவரம்: சென்னை, 355, பெங்களூரு, 350, மைசூர், 345, ஹைதராபாத், 320, மும்பை, 360, விஜயவாடா, 321, கொல்கத்தா, 370, பர்வாலா, 317, டில்லி, 330. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 57 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 74 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## <u>கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி முகாம்</u>

கும்பகோணம் : திருநீலக்குடியில் நடந்த கோமாரி தடுப்பூசி முகாமில், 506 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. கும்பகோணம் அருகே உள்ள திருநீலக்குடியில் கால்நடை கோமாரி தடுப்பூசி முகாம், 7வது முறையாக நடந்தது. கும்பகோணம் கால்நடை பராமரிப்பு துறை கோட்ட உதவி இயக்குனர் டாக்டர் உதுமான், தடுப்பூசி போடும் பணியை தொடங்கி வைத்தார். திருநீலக்குடி மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள பொதுமக்கள், கால்நடைகளை அழைத்து வந்து தடுப்பூசி போட்டுச் சென்றனர். இதில், 494 பசுக்களும், 12 எருமை மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டது. தடுப்பூசி பணியை ஆடுதுறை கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் சுதாரோஸ், கால்நடை ஆய்வாளர் சோழராஜன், கால்நடை பராமரிப்பு உதவியாளர் மகேஷ் மற்றும் பணியாளர்கள் செய்தனர்.

## <u>2,541 மெட்ரிக் டன் உரம் : சம்பா சாகுபடிக்கு வரத்து</u>

திருவாரூர் : ஒடிஸா மாநிலத்திலிருந்து, ரயில் மூலம் திருவாரூர் வந்துள்ள, 2,541 மெட்ரிக் டன் உரங்களை, கலெக்டர் மதிவாணன் ஆய்வு செய்தார். திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களில் சம்பா நெல்

சாகுபடிக்கா, ஒடிஸா மாநிலத்திலிருந்து ரயில் மூலம், 42 வேகன்களில், 2,451 மெட்ரிக் டன் டி.ஏ.பி., உரம் திருவாரூர் ரயில் நிலையம் வந்தது. இந்த உரங்களை கலெக்டர் மதிவாணன், டி.ஆர்.ஒ(பொ) அழகிரிசாமி, கூட்டுறவு துறை மண்டல இணை பதிவாளர் ரவிச்சந்திரன், வேளாண்துறை இணை இயக்குனர் மயில்வாகனன் மற்றும் அலுவலர்கள் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வுக்கு பின், கலெக்டர் மதிவாணன் நிருபர்களிடம் கூறியதாவது: திருவாரூரை தலைமையிடமாக கொண்டு இயங்கி வரும் தஞ்சை கூட்டுறவு விற்பணை இணையத்தின் மூலம், திருவாரூர் மற்றும் நாகை மாவட்ட விவசாய பணிகளுக்கு இந்த உரங்கள் விநியோகிக்கப்பட உள்ளன. இதற்காக, திருவாரூர் மற்றும் திருத்துறைப்பூண்டி, நாகை, மயிலாடுதுறை ஆகிய ஊர்களில் உள்ள கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும், என்று கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார்.

## <u>முட்டைக்கோஸ் வகையை சேர்ந்த "பிரேசில் ஸ்பிரவுட்' சாகுபடி</u>

மூணாறு : வெளி நாடுகளில் அதிகளவில் சாகுபடி செய்யப்படும் முட்டைக் கோஸ் வகையை சேர்ந்த "பிரேசில் ஸ்பிரவுட்' கேரள மாநிலம் காந்தலூரில் சாகுபடி செய்யப்படுகிறது. இடுக்கி மாவட்டத்தில் தமிழக எல்லையோரம் உள்ள காந்தலூர் ஊராட்சியில் காய்கறி மற்றும் பழ வகைகள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு முட்டைக் கோஸ் வகையைச் சேர்ந்த "பிரேசில் ஸ்பிரவுட்' சாகுபடியில் தற்போது விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இவை பிரேசில்,பெல்ஜியம் போன்ற நாடுகளை சேர்ந்த பயிர் என்றபோதிலும், ஜெர்மனி, இங்கிலாந்து,நெதர்லாந்து போன்ற நாடுகளில் கூடுதலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வைட்டமின்-"கே' உள்பட பல்வேறு ஊட்டச் சத்துக்கள் உள்ளதால், இதனை வெளிநாடுகளில் குழந்தைகளுக்கு உணவாக வழங்குகின்றனர். தவிர கட்லெட், சான்ட்வீச் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இவ்வகை பயிர் சாகுபடியை தற்போது

காந்தலூர் பகுதியில் பலர் செய்துள்ளனர். பப்பாளி மரத்தைப் போன்ற தோற்றம் கொண்ட இவை, இரண்டு அடி முதல் மூன்றடி உயரம் வளரக் கூடியவை. தண்டுப் பகுதியில் முட்டைக் கோஸ் வடிவில் சிறிதாக காய்க்கும் இவற்றை "மரக்கோஸ்' எனவும் அழைக்கின்றனர். இந்திய சந்தையில் கிலோ ரூ.200க்கும் அதிகமாக விலை போகிறது. இவை, தற்போது காந்தலூரில் கிலோ ரூ.205 வரை விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இவற்றிற்கு 15 டிகிரி முதல் 24 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை ஏற்றதாகும். இவை சூப்,குழம்பு, வறுவல் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. நல்ல ருசியுடன் உள்ளதால் இவ்வகை மரக்கோஸ்க்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

## <u>மிளகு விலை உயர்வால் ஆப்பாயிலுக்கு சீரகப்பொடி</u>

தேனி : மிளகு விலை ஆயிரம் ரூபாயை தாண்டியதால் தேனி ஒட்டல்களில் ஆம்லெட், ஆப்பாயிலுக்கு சீரகம், ஓமம் கலந்த பொடி பயன்படுத்தப்பட்டு வருகிறது. கேரளாவில் மிளகு விளைச்சல் சரிவால் நாடு முழுவதும் மிளகு விலை அதிகரித்துள்ளது. தேனி மார்க்கெட்டில் கடந்த ஒரு மாதமாக மிளகு விலை கிலோ ஆயிரம் ரூபாயை தாண்டி விட்டது. இது குடும்பங்களில் மட்டுமின்றி வர்த்தக ரீதியான பாதிப்பையும் ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக அசைவ ஓட்டல்களில் ஆம்லெட், ஆப்பாயிலுக்கு மிளகு பொடி போடுவது தான் வழக்கம். ஆனால் 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் ஆப்பாயிலுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மிளகு வாங்கி பொடி செய்து தூவுவது இயலாத காரியம். எனவே தேனியில் பல ஓட்டல்களில் சப்தமில்லாமல், மிளகு பொடியில் இருந்து சீரகம், ஓமம் கலந்த பொடிக்கு மாறி விட்டனர். இது வாடிக்கையாளர்களுக்கே தெரியவில்லை. ஆம்லெட்... ஆப்பாயிலில் இருப்பது மிளகு பொடி தான் என நினைத்து சாப்பிட்டு வந்து விடுகின்றனர். ஓட்டல் உரிமையாளர்கள் சிலர் கூறியதாவது: வழக்கமாக ஆம்லெட், ஆப்பாயிலுக்கு மிளகுத் தூள் போடுவார்கள் என்று தான்

எல்லோரும் நினைக்கின்றனர். ஆனால் இந்த தூளில் மிளகு, சீரகம், ஓமம் மூன்றும் கலந்திருக்கும். அதாவது 70 சதவீதம், 20 சதவீதம், 10 சதவீதம் என்ற வீதத்தில் கலப்படம் இருக்கும். இதில் எந்த பொருள் விலை அதிகரிக்கிறதோ அந்த பொருளின் கலப்பு சதவீதம் குறைக்கப்படும். மிளகு விலை அதிகமானால் அதன் கலப்பு 10 சதவீதமாகி விடும். தற்போது 70 சதவீதம் சீரகம், 20 சதவீதம் ஓமம், 10 சதவீதம் மிளகு பயன்படுத்தி வருகிறோம். சீரகம், ஓமம் இவற்றின் விலைகளும் கிலோ 200 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த கலப்பு தூளின் குணம் நல்ல சுவையாகவே இருக்கும். எனவே வாடிக்கையாளர்களை கவரும். சீரகம், ஓமம் விலை உயர்வால், அதிலும் எங்களுக்கு சிரமம் தான். இருப்பினும் வாடிக்கையாளர்களை கவர நாங்கள் பயன்படுத்தி வருகிறோம், என்றனர்.

## திருப்புத்தூரில் 58.2 மி.மீ., மழை

சிவகங்கை : சிவகங்கை மாவட்டத்தில் நேற்று முன்தினம் பரவலாக நல்ல மழை பெய்தது. அதிகபட்சம் திருப்புத்தூரில் 58.2 மி.மீ.,வரை பதிவானது. மாவட்டத்தில், ஆடி பட்டத்தில் விதைப்பு பணிகளை துவங்க முடியாத வகையில், போதிய மழையின்றி விவசாயிகள் தவித்தனர். இருப்பினும், ஆவணி துவக்கத்தில் காரைக்குடி தாலுகாவில், ஊரணி, குளங்கள் நிரம்பும் வகையில் மழை பெய்தது. மற்ற தாலுகாக்களில் விவசாயத்திற்கு ஏற்ற மழை இல்லை. விவசாயிகள் நடவுபணிகளை மேற்கொள்ளாமல், நிலத்தை மட்டுமே சீர்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். கடந்த 13ம் தேதி காரைக்குடி, சிவகங்கை, திருப்புவனத்தில் லேசான மழை பெய்தது. செப்.,14 அன்று மாலையில் இருந்து இரவு வரை, மாவட்டம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்தது. பலத்த காற்று வீசினாலும், பெரிய அளவில் பாதிப்பு இல்லை. திருப்புத்தூரில் அதிகபட்சமாக 58.2 மி.மீ., காரைக்குடியில் 1.0, மானாமதுரை 12.8,

சிவகங்கை 47.0, திருப்புவனம் 8.0, இளையான்குடி 2.8, தேவகோட்டை 2.2 மி.மீ., வரை பதிவானது. இந்த மழையின் மூலம், விவசாயிகள் பணிகளை துவக்கியுள்ளனர். தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே, நடவு பணிகளை துவக்க முடியும் என, தெரிவித்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**எதிர்பார்த்ததைவிட கேரளாவில் அதிகமாக பெய்தது**

பருவமழைதிருவனந்தபுரம்: கேரளா உட்பட இந்தியா முழுவதும் இவ்வருடம் தென்மேற்கு பருவமழை குறைவாகவே பெய்யும் என்று கடந்த மே மாதம் மத்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. இதனால் உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கும் என்ற அச்சம் ஏற்பட்டது. கேரளாவில் வழக்கமாக ஜூன் மாதம் முதல் செப்டம்பர் வரை தென்மேற்கு பருவமழை பெய்யும். வழக்கமாக ஜூன் 1ம் தேதி கேரளாவில் பருவமழை தொடங்கும். ஆனால், இவ்வருடம் 1 வாரம் கழித்தே பருவமழை ஆரம்பித்தது. வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்தபடி ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் வழக்கமாக பெய்யும் மழையைவிட 50 சதவீதம் குறைவாகவே பெய்தது. இதனால் இவ்வருடம் மழை குறையும் என கருதப்பட்டது. ஆனால் ஆகஸ்ட் மாதத்திலிருந்து கேரளா முழுவதும் கனமழை பெய்தது. ஆலப்புழா, திருச்சூர், காசர்கோடு மற்றும் வயநாடு ஆகிய 4 மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் கூடுதல் மழை பெய்தது. வழக்கமாக கேரளாவில் ஜூன் முதல் செப்டம்பர் 2ம் வாரம் வரை சராசரியாக 1894 மி.மீ. மழை பெய்யவேண்டும். ஆனால் இவ்வருடம் நேற்று முன்தினம்

வரை 2051 மி.மீ. மழை பெய்துள்ளது. இது வழக்கத்தை விட 8 சதவீதம் அதிக மழையாகும்.

**<u>தேயிலை தூள் விலை: கிலோவுக்கு ரூ. 4 அதிகரிப்பு</u>**



குன்னூர்:குன்னூரில் நேற்று நடந்த ஏலத்தில் தேயிலை தூள் கிலோவிற்கு ரூ. 4 வரை அதிகரித்தது. நீலகிரி மாவட்டம் (குன்னூர் டீ டிரேடர்ஸ் அசோசியேஷன்) தேயிலை ஏல மையத்தில் 13.39 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. அதில் இலை ரகம் 9.11 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.28 லட்சம் கிலோவும் அடங்கும். ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு அதிகரித்ததால் 80 சதவீத தேயிலை தூள் விற்பனையானதுடன் அனைத்து ரகத்திற்கும் கிலோ ரூ.4 வரை உயர்ந்தது. இந்த வார நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண ரக வகை கிலோ ஒன்றுக்கு ரூ. 45 முதல் ரூ. 50, உயர்வகை ரூ. 100 முதல் ரூ. 150, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ. 45 முதல் ரூ. 50, உயர் வகை ரூ.120 முதல் ரூ. 185 விலை வழங்கப்பட்டது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக கிலோ ஒன்றுக்கு ரூ.191, ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.251 விலை கிடைத்தது.

**<u>துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை சின்ன வெங்காயம்</u>**

ஏலம்திருச்சி, : துறையூர் ஒழுங்குமுறை விற்பனைகூடத்தில் சின்ன வெங்காய மறைமுக ஏலம் நாளை நடைபெறுகிறது. திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் துறையூரில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை காலை 11மணிக்கு

சின்ன வெங்காயம் மறைமுக ஏலம் நடைபெற உள்ளது. எனவே திருச்சி மாவட்டம் துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை வட்டாரங்களில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்து இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கொண்டு வந்து மறைமுக ஏலத்தில் பங்கேற்கலாம். மேலும், உற்பத்தி செய்த சின்ன வெங்காயத்துக்கு மறைமுக ஏலம் மூலம் நல்ல விலை பெறுவதோடு எந்தவித கமிஷனுமின்றி உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுவதால் விவசாயிகள் இதில் பங்கேற்று பயனடையலாம் என வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

## 1,614 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

திருத்துறைப்பூண்டி, : திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி லயன்ஸ் கிளப், லியோ கிளப், கால்நடை பராமரிப்புதுறை, வரம்பியம் பழையங்குடி, நுணாக்காடு, எழிலூர் கிராமங்களில் ஊராட்சி மன்றம் சார்பில் கால்நடை சிகிச்சை முகாம் நடைபெற்றது. லயன்ஸ் கிளப் தலைவர் பொறியாளர் கைலாசநாதன் தலைமை வகித்தார். முன்னாள் தலைவர்கள் நாராயணசாமி, ஜெயக்குமார், அசோக்குமார், பால்ராஜ், கவிஞர்கள் உத்தமசோழன், ஜோசப்ராஜ், சேசாச்சலம், முகமதுயாசீன், லியோ கிளப் மாவட்ட தலைவர்கள் சக்கரபாணி, சிவகணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை உதவி மருத்துவர் ராமலிங்கம் தலைமையில் டாக்டர்கள் சுரேந்திரன், காவ்யா ஆகியோர் கொண்ட மருத்துவ குழுவினர் 500 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்து, 1614 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டனர்.

## வெண்டைக்காய் வரத்து அதிகரிப்பால் விலை சரிவு கிலோ தி10க்கு விற்பனை

தர்மபுரி, : தர்மபுரி சந்தைக்கு வெண்டைக்காய் வரத்து அதிகரிப்பால்

விலை சரிந்துள்ளது. நேற்று ஒரு கிலோ தி10க்கு விற்பனை செய்யப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் 500 ஏக்கருக்கு மேல் வெண்டைக்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தர்மபுரி, நல்லம்பள்ளி, காரிமங்கலம், பாலக்கோடு, பென்னாகரம், பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் உள்ளிட்ட பகுதிகளில வெண்டைக்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது மாவட்டத்தில் வெண்டைக்காய் அறுவடை சீசன் தொடங்கியுள்ளது. மேலும், சந்தைக்கு வெண்டை வரத்து அதிகரிப்பால் விலை சரிந்துள்ளது. கடந்த மாதம் தி18 க்கு விற்பனை செய்த ஒருகிலோ வெண்டைக்காய் நேற்று தி10க்கு விற்பனை செய்யப்பட்டது. விலை சரிவால் மக்கள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். விலை சரிவால் சில தோட்டங்களில் வெண்டை சரியான நேரத்தில் அறுவடை செய்யாமல் தோட்டத்திலேயே விடப்பட்டுள்ளது.

**<u>தர்மபுரி சந்தைகளில் மக்காச்சோள கதிர் விற்பனை ஜோர்</u>**

தர்மபுரி, : தர்மபுரி சந்தைபேட்டை பகுதியில் மக்காச்சோளக்கதிர்கள் பெருமளவில் குவித்து வைத்து விற்பனை செய்கின்றனர். தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி, நல்லம்பள்ளி, காரிமங்கலம், பென்னாகரம், பாலக்கோடு, மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் ஆகிய ஒன்றியங்களில் 400 ஏக்கருக்கு மேல் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நேரடியாகவும், மஞ்சள், கரும்பு பயிர்களில் ஊடுபயிராகவும் பயிரிடப்பட்டுள்ளது. இங்கு விளையும் மக்காச்சோளக் கதிர்களை பறித்து உள்ளூர் தேவை போக வெளிமாவட்ட வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். குறிப்பாக, நாமக்கல், சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரும் வியாபாரிகள் மக்காச் சோளக்கதிர்களை வாங்கி தமிழ்நாட்டில் உள்ள பல பகுதிகளுக்கும், அனுப்பி வைக்கின்றனர். கோழிப்பண்ணையாளர்களும் தங்கள் ஏஜென்டுகளை அனுப்பி கோழிப்பண்ணைக்கு தேவைப்படும் கோழித்தீவனம் அரைப்பற்கு மக்காச்சோளம் வாங்குகின்றனர். தர்மபுரி மாவட்டத்தில்

அறுவடை சீசன் துவங்கவுள்ளது. முன்னதாகவே ஒரு சில விவசாயிகள் அறுவடை செய்து உழவர் சந்தை, தினசரி சந்தைகளில் விற்பனை செய்கின்றனர். நான்கு கதிர் தி10க்கு விற்பனை செய்கின்றனர். ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் பகுதியில் இருந்தும் மக்காச்சோளத்தை தருவித்து, வியாபாரிகள் தர்மபுரி சந்தைபேட்டையில் குவித்து வைத்து விற்பனை செய்கின்றனர்.

<u>வரத்து அதிகரித்ததால் பெரிய வெங்காயம் விலை சரிவு</u>

சேலம், : சேலம் மார்க்கெட்டுகளுக்கு வரும் பெரிய வெங்காயத்தின் வரத்து அதிகரித்துள்ளதால் விலை சரிந்துள்ளது. வரத்து குறைந்ததால் கடந்த இரண்டு மாதங்களாக உச்சத்தில் இருந்த பெரிய வெங்காயத்தின் விலை, இரு வாரங்களாக படிப்படியாக குறைந்து வருகிறது. இதனால் கடந்த மாதம் கிலோ தி40 முதல் 45 வரை விற்கப்பட்ட பெரிய வெங்காயம் தற்போது கிலோவிற்கு தி25 முதல் 30 வரை விற்கப்படுகிறது. மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகத்தின் பெல்லாரி பகுதியிலிருந்து பெரிய வெங்காயம் அதிகளவில் வருகிறது. சேலத்தின் வ.உ.சி மார்க்கெட் மற்றும் பால் மார்க்கெட்டுக்கு நேரடியாக கொள்முதல் செய்யப்படும் பெரிய வெங்காயம், பின்னர் சில்லரை வியாபாரிகள் மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. சேலத்திற்கென தினமும் 20க்கும் மேற்பட்ட லாரிகளில் வெங்காயம் வருகிறது. கடந்த இரு வாரங்களாக அதன் வரத்து அதிகரித்ததால் விலை குறைந்துள்ளது.

<u>கரூரில் 19ல் விவசாயிகள் குறை தீர் நாள் கூட்டம்</u>

கரூர், : கரூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் இம்மாதம் 19 ம் தேதி நடைபெற உள்ளது. கரூர் மாவட்டத்தில் செப்டம்பர் மாதத்துக்கான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஜெயந்தி தலைமையில் இம்மாதம் 19ம் தேதி (வெள்ளி) காலை

11 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் கரூர் மாவட்ட விவசாயிகள், விவசாயசங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்று பயன்பெறுமாறு கலெக்டர் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், இக்கூட்டத்தில் விவ சாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டுமே விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றார்.

## திருந்திய நெல் சாகுபடியில் நடவு செய்யும் முறைகள் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் ஆலோசனை

அன்னவாசல், : புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பாப் பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் நடவு முறைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி மற்றும் வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர். இதுகுறித்து அவர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா பருவத்தில் திருந்திய நெல்சாகுபடி முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகள் நடவு வயல் தயாரித்தல் மற்றும் நடவு முறைத்தொழில்நுட்பங்களை முறையாகக் கடைப்பிடித்தால்தான் திருந்திய நெல் சாகுபடி முறையில் கூடுதல் மகசூல் பெற முடியும். நடவு வயலை இரண்டு அல்லது மூன்று முறை நன்கு உழவு செய்ய வேண்டும். கடைசி உழவின்போது ஏக்கர் ஒன்றுக்கு 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், 16 கிலோ பொட்டாசியம் உரங்களை அடியுரமாக இடவேண்டும், வயலை நன்கு மேடு பள்ளமில்லாமல் சமன் செய்யவேண்டும். பள்ளமாக இருக்குமிடங்களில் நடப்படும் இளம் நாற்றுகள் அழுகிவிட வாய்ப்புள்ளது, நடவு வயலில் நீர் தேங்காமல் வடியுமாறு வடிகால் வசதிகளை ஏற்படுத்தவேண்டும், ஏக்கர் ஒன்றுக்கு தலா பத்து பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர் உரங்களை 50 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து சீராகத் தூவ வேண்டும், மேலும் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு

செய்திட 10 முதல் 14 நாட்கள் வரை வயதுடைய இளம் நாற்றுகளை நடவுக்குப் பயன்படுத்த வேண்டும். ஒரு குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்யவேண் டும், நடவு செய்யும்போது வேர்கள் மேல்நோக்கி இல்லாமல் மூன்று செ.மீ. ஆழத்திற்கு மிகாமல் மேலாக நடவு செய்ய வேண் டும், சதுர முறையில் நடவு செய்வதற்கு நடவு அடை யாளக் கருவி பயன்படுத்தி அடையாளமிட்ட இடத் தில் நாற்றை வைக்கவும். நடவுக்கு முன் ஏக்கருக்கு 5 கிலோ நெல் நுண்ணூட்டக் கலவையினைத் தேவை யான அளவு மணலுடன் கலந்து சீராக நடவு வயலில் தூவவும், மேற்கண்டவாறு திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவுத் தொழில்நுட்பங்களைத் தவறாது கடைப்பிடித்து கூடுதல் மகசூல் பெறலாம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**<u>களைகளைக் கட்டுப்படுத்தினால் சம்பா நேரடி நெல் விதைப்பில் மகசூல் இழப்பை தவிர்க்கலாம்வேளாண் அதிகாரி ஆலோசனை</u>**

புதுக்கோட்டை, களைகளை கட்டுப்படுத்துவதால் சம்பா நேரடி நெல் விதைப்பு சாகுபடியில் களைகளைக் கட்டுப்படுத்தினால் மகசூல் இழப்பை தவிர்க்கலாம் என புதுக் கோட்டை வேளாண் இணை இயக்குநர் ஷாஜகான் ஆலோசனை வழங்கியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு புதுக்கோட்டை மாவட்டத்தில் காவிரி மேட்டூர் பாசன பரப்புப் பகுதிகளான அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, திருவரங்குளம் வட்டாரங்களிலும் அரி மளம் வட்டாரம் ஏம்பல் பகுதிகளிலும் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். புதுக்கோட் டை மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் சுமார் 24,000 எக்டேர் பரப்பளவில் நேரடி நெல் விதைப்பு முறையில் சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது. நேரடி நெல் விதைப்பில் களைகள் அதிகம் வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். நெல் முளைக்கும்போது களைகளும் சேர்ந்து முளைத்து நெற்பயிரினை மூடும் நிலை ஏற்படுகிறது. ஆனால், தற்போது நிலவி வரும் வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையினால் ஆட்களை வைத்து களை எடுப்பது

இயலாத காரியமாக உள்ளது. நேரடி நெல் விதைப்பில் குறைந்த பட்சம் ஐம்பது நாட்கள் வரை களைகள் இல்லாத சூழல் அவசியம். களைகள் அதிகமாக இருந்தால் பயிர் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூல் இழப்பு ஏற்படும். எனவே விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் களை மேலாண்மையில் கவனம் செலுத்துவது அவசியமாகும். வயலை நன்றாக சமன் செய்தபின் விதைக்க வேண் டும். தொழு உரமிடும்போது மக்காத தொழுஉரம் அல்லது சாணம் நிலத்திற்கு இடுவதால் பலவிதமான களைகளின் விதைகள் பாவி விடுகின்றன. எனவே நன்கு மக்கிய தொழு உரம் அல்லது சாணம் இடவேண்டும். வரப்பு மற்றும் வாய்க்கால்களில் களை வராமல் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். சரியான பயிர் எண்ணிக்கை இருந் தால் களைகளின் வளர்ச்சி தடுக்கப்படுகின்றது. நேரடி நெல் விதைப்பு செய்த வயலில் பயிரின் ஆரம்ப காலத்தில் போதிய அளவு தழைச்சத்து இடுவதால் பயிர் வேகமாக வளர்ந்து களைகளின் பாதிப்பைக் குறைத்து விடுகிறது. நெல் விதைத்த 3 முதல் 5 தினங்களுக்குள் ஏக்கருக்கு பென்டி மெத்தலின் 1.0 லிட்டர் அல்லது பிரிடிலாக்குளோர் 450 மில்லி அல்லது விதைத்த 5 முதல் 6 நாட்களுக்குள் பைரசோசல்புரான் ஈத்தைல் களைக்கொல்லி ஏக்கருக்கு 80 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து வயலில் போதுமான ஈரம் இருக்கும் பொழுது கைத்தெளிப்பான் மூலம் பின்னோக்கி நகர்ந்து தெளிக்கவும். வயலில் ஈரம் அதிகமாக இருக்கும் பட்சத்தில் களைக்கொல்லியினை 20 கிலோ மண்ணு டன் கலந்து சீராகத் தூவவும். பிஸ்பைரிபாக் சோடியம் 10 எஸ்.சி.களைக்கொல்லி ஏக்கருக்கு 100, 120 மில்லி அல்லது மெட்சல்ப்யுரான் மீத்தைல் குளோரிமீயுரான் ஈத்தைல் களைக்கொல்லியை ஏக்கருக்கு 8 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் களையின் 2,4 இலைப் பருவத்தில் தெளித்து புல், கோரை மற்றும் சில அகன்ற இலைகளைக் கட்டுப்படுத்தலாம். களைக்கொல்லி பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டியது நெற்பயிருக்கு ஏற்ற பரிந்துரை செய்யப்படும் களைக்கொல்

லியை மட்டும் சரியான அளவில் தெளிக்க வேண் டும். தெளித்த பின் வயலில் இரு தினங்களுக்கு நடக்கக்கூடாது. நடந்தால் களைக்கொல்லி கால்களில் ஒட்டிக்கொண்டு அவ்விடத்தில் களைகள் வளர ஏதுவாகும். களைக்கொல்லி தெளிக்கும்போது மண்ணில் ஈரம் இருப்பது அவசியம். தெளிப்பானை நன்கு கழுவ வேண்டும் அல்லது களைக்கொல்லி தெளிப்பதற்கென தனி கைத்தெளிப்பான் பயன்படுத்துவது சிறந்தது. மேற்கூறிய முறைகளைப் பின்பற்றி களைகளைக் கட்டுப்படுத்துவதால் சம்பா நேரடி நெல் விதைப்பில் மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம் எனத்தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வேதாரண்யத்தில்மழை விவசாயிகள் மகிழ்ச்சி**

வேதாரண்யம்,: வேதாரண்யம் சுற்று வட்டாரத்தில் நேற்று இடியுடன் ஒரு மணி நேரம் மழை பெய்தது. இது வேதாரண்யத்தில் 34.4 மில்லி மீட்டரும், தலைஞாயிறில் 9.4 மில்லி மீட்டரும் பதிவானது. இந்த மழை வேதாரண்யம் பகுதி மானாவாரி நெல் சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது. இருப்பினும் உப்பு உற்பத்தி இந்த மழையால் பாதிக்கப்பட்டு உள்ளது. பணப் பயிர்களான மா, சவுக்கு, முந்திரி, தென்னை போன்ற பயிர்களுக்கு ஏற்றதாக உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**அழுகிய காய்கறிகள், மலரில் இருந்து உரம் தயாரிப்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

கலசபாக்கம் : அழுகிய நிலையில் உள்ள காய்கறிகள், மலர் வகைகளில் இருந்து இயற்கை உரம் தயாரிப்பது குறித்து நேற்று விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. கலசபாக்கம் அடுத்த மேல்சோழங்குப்பம்

கிராமத்தில் இயற்கை முறையில் குறைந்த செலவில் விவசாயம் செய்து அதிக வருவாய் ஈட்டும் வகையில் இயற்கை உரம் தயாரிப்பது குறித்த பயிற்சி முகாம் வாழும் கலை பயிற்சி சார்பில் நடைபெற்றது. இதில் பெங்களூரை சேர்ந்த வேளாண்மை விஞ்ஞானி ராஜாமணி இயற்கை உரம் தயாரிப்பது குறித்தும் அழுகிய நிலையில் வீணாகக்கூடிய காய்கறிகள் மற்றும் மலர் வகைகள் ஆகியவற்றில் இருந்து எவ்வாறு இயற்கை உரம் தயாரிப்பது? என்பது குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். மேலும் அவற்றை உபயோகிக்கும் முறைகள் குறித்தும் விளக்கப்படடது. கலசபாக்கம் பிடிஓக்கள் வி.கருணாநிதி, கே.பால கிருஷ்ணமூர்த்தி, ஊராட்சி தலைவர் பானுமதி ஆறுமுகம், மற்றும் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை வாழும் கலை பயிற்சி ஆசிரியர் பி.மனோகரன் செய்திருந்தார்.

## திருந்திய நெல் சாகுபடி பரப்பு அதிகரிப்பு 2450 எக்டரில் நடவு பணி துவக்கம்

பள்ளிபாளையம், : திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின் மூலம் பயிரிடப்பட உள்ள நிலங்களில் வேளாண்மைத்துறையினர் சாகுபடியை துவக்கினர். பள்ளிபாளையம் வட்டாரத்தில் 2450 எக்டர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின் மூலம் ஒற்றை நாற்று முறையில் நடவு செய்யும் பணி துவங்கியது. நாற்று விட்ட 14 நாட்களில் இந்த முறையில் நெல் நடவு செய்யப்படுவதால் வழக்கமான முறை யைவிட சுமார் பத்து நா ட்கள் முன்னதாகவே நடவு பணிகள் துவக்கப்பட்டுள்ளது. மேட்டூர் கிழக்குகரை கால்வாய் பாசனத்திட்டத் தின் கடை மடை பகுதியான செங்குட்டைபாளையம் பகுதியில் நேற்று கூலி ஆட் களை கொண்டு நடவு பணி கள் மேற்கொள்ளப்பட்டது. வழக்கமான நடவை விட திருந்திய நெல்சாகுபடியில் களையெடுப்பது எளிதாக உள்ளதாலும், நோய் தாக்குதல் குறைவாக இருப்பதாலும், இந்த ஆண்டு திருந்திய நெல் சாகுபடியின் பரப்பளவு அதிகரித்துள்ளது.

## பரமத்திவேலூரில் மக்காச்சோளம் விலை டன்னுக்கு ரூ.2,000 சரிவு

பரமத்திவேலூர், : பரமத்திவேலூரில் மக்காச்சோளம் விலை டன்னுக்கு ரூ.2 ஆயிரம் வரை சரிந்துள்ளது. நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா ஜேடர்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மக்காச் சோளம் விளைவிக்கப்படுகிறது. அறுவடைக்கு பின் சாலைப்புதூரில் திங்கட்கிழமையில் செயல்பட்டு வரும் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் ஏலம் விடுகின்றனர். ஏலத்தில் எடுத்த மக்காச்சோளத்தை ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். கடந்த வாரத்தில் மக்காச்சோளம் ஒரு டன் ரூ.16 ஆயிரத்திற்கு விற்பனை ஆனது. இந்த வாரம் ஒரு டன் மக்காச்சோளம் ரூ.14 ஆயிரத்திற்கு விற்பனையானது. வெளி மாநிலங்களில் இருந்து வரத்து அதிகரித்துள்ளதால், மக்காச்சோளத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

## <u>கொங்கணாபுரத்தில் 2200 மூட்டை பருத்தி ரூ38 லட்சத்துக்கு ஏலம்</u>

இடைப்பாடி, : திருச்செங்கோடு வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்தில், 2200 மூட்டை பருத்தி ரூ.38 லட்சத்துக்கு ஏலம் போனது. சேலம் மாவட்டம், இடைப்பாடி அருகே கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் மாலை பருத்தி ஏலம் நடந்தது. இதில், இடைப்பாடி, மலங்காடு, ஆடையூர், பக்கநாடு, தேவூர், கல்வடங்கம், புள்ளாகவுண்டம்பட்டி, கல்லப்பாளையம், நாமக்கல், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஈரோடு ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள், பெங்களூரு, ஓசூர், திருப்பூர், நாமக்கல், சேலம் பகுதி வியாபாரிகள் என 800 பேர் கலந்து கொண்டனர். இதில், 2ஆயிரத்து 200 பருத்தி மூட்டைகள் ரூ.38 லட்சத்துக்கு விற்பனையானது. இதில் பிடி ரகம் குவிண்டால் ரூ.4850 முதல் ரூ.5342 வரை விலை போனது.